<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS 177/2018**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 11.11.2025

Dw1 (செல்லப்பன்)

**<u>குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)</u>**

திவ்யா என் மகள். சண்முக சாமி என் சகோதரர். 31.05.2012 ல் சண்முக சாமி இறந்து விட்டார் என்றால் சரிதான். தாவா சொத்தை சண்முக சாமியும், முருகேசன் ஆகியோர் சேர்ந்து கிரயம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். என் சகோதரர் சண்முகசாமி வாதிக்கு 13.02.2012 ல் உயில் ஆவணம் ஏற்படுத்தினார் என்றால் ஆமாம். என்னிடம் காண்பிக்கப்படும் உயில் (வாசாஆ 2) ஆவணம் தான் அது என்றால் ஆமாம். உயில் ஆவணத்தில் சண்முகசாமி அனைத்துப பக்கங்களிலும் கையொப்பம் செய்துள்ளார். உயிலில் ராதாகிருஷ்ணன் மற்றும் செங்கோட்டையன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளனர். முருகேசன் என் மீது வழக்கு தொடர்ந்திருந்தார் என்றால் சரிதான். வாதிக்கு உயில் படி பாதி சொத்தை பிரித்துக கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.11.11 17:59:00 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS